# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2019

**ஆண்டு: 6** **திகதி: 22/06/2019**

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி. தேவரதி குலராஜா**

**மாணவர் பெயர்:** ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| வினா 6 | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 31 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப் பகுதியை கவனமாக வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

## நெருப்பு

நெருப்பின் மறுபெயர்கள் அக்கினி, தீ என்பன ஆகும். ஐம்பூதங்களில் நெருப்பு ஒன்றாகும். நெருப்பு எரிவதற்கு ஒட்சிசன் என்ற வாயு பயன்படும். ஆக்கவும், அழிக்கவும் நெருப்பு உதவுகிறது. 'நெருப்பு இல்லாமல் புகை வராது' என்பது பழமொழி. வளங்களுள் ஒன்றான நெருப்பு உலகிற்கு ஒளியையும் வெப்பத்தையும் கொடுக்கிறது. சூரியன் ஒரு தீப்பிளம்பாகும். அது உலகிற்கு ஒளியையும் வெப்பத்தையும் கொடுக்கிறது. ஆதி மனிதன் ஒரு கல்லுடன் இன்னொரு கல்லை உராஞ்சி அல்லது ஒரு தடியுடன் இன்னொரு தடியை உராஞ்சி நெருப்பை ஏற்படுத்தினான். தீக்குச்சியைக் கொண்டு நாம் தீயை ஏற்படுத்தலாம்.

உணவு சமைப்பதற்கு நாம் மின்சாரம், பெற்றோலிய வாயு, மண்ணெண்ணெய், விறகு முதலியவற்றை உபயோகிக்கிறோம். போர் செய்யும்போது அணுகுண்டின் மூலம் ஒரு இடம் எரிந்து அழிவதை நாம் காணலாம். நெருப்பை நாம் ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்துவது சிறந்தது.

**1. கிரகித்தல் (Comprehension)**

1.1) நெருப்பு எரிவதற்குப் பயன்படும்வாயு எது?

______________________________

1.2) நெருப்பு உலகிற்கு அளிப்பவை எவை?

______________________________

1.3) எமக்கு ஒளியையும் வெப்பத்தையும் அளிக்கும் தீப்பிளம்பு எது?

______________________________

1.4) ஆதி மனிதன் எவ்வாறு நெருப்பை உண்டாக்கினான்?

______________________________

1.5) நாம் சமைப்பதற்கு உபயோகிக்கும் எரிபொருட்கள் எவை?

______________________________

1.6) நெருப்பை பற்றிய பழமொழி ஒன்று எழுதுக?

---

1.7) அணுகுண்டு எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

---

**2. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக**

2.1) நெருப்பு நன்றாக எரிவதற்கு தேவையானது

(புகை, வெளிச்சம், ஒட்சிசன்)

2.2) நெருப்பின் மறுபெயர்

(வெப்பம், அக்கினி, சூடு)

2.3) நெருப்பை உண்டாக்கத் தேவையானது

(விறகு, சாம்பல், தீப்பெட்டி)

2.4) இரு கற்களை அல்லது இரு தடிகளை உராஞ்சி நெருப்பை உண்டாக்கியவர்கள்

(மிருகங்கள், ஆதி மனிதர், பறவைகள்)

2.5) உலகிற்கு வெப்பத்தையும் ஒளியையும் அளிப்பது

(சூரியன், சந்திரன், நட்சத்திரம்)

**3. எதிர்ச் சொற்களின் கீழ்க் கோடு இடுக.**

3.1) சூரியன் உலகிற்கு ஒளியைப் பரப்புகிறான்.
ஒளி என்பதன் எதிர்ப்பொருட் சொல்
(வெளிச்சம், ஒலி, இருள்)

3.2) அது ஒளியையும் வெப்பத்தையும் கொடுக்கிறது.
வெப்பம் என்பதன் எதிர்ச்சொல்
(வெய்யில், குளிர், சூடு)

3.3) மூடிய பாத்திரத்திலுள்ள நெருப்பு அணைந்து போகும்.
அணைதல் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
(அழித்தல், எரிதல், மூடுதல்)

3.4) பகல் வேளைகளில் சூரியன் வெளிச்சம் கொடுக்கும்.
பகல் என்பதன் எதிர்ச்சொல்
(காலை, மாலை, இரவு)

**4. Translation**

Choose the corresponding sentences translated from the text.

4.1) Production and destruction can be caused by fire

______________________________

______________________________

4.2) The sun gives light and heat to the earth

______________________________

______________________________

4.3) The sun is a ball of fire

______________________________

4.4) A place is destroyed by bomb in war time

______________________________

______________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 12 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்**

1) ஆடு

பெயர் : ______________________________

வினை : ______________________________

2) படி

பெயர் : ______________________________

வினை : ______________________________

3) மடி

பெயர் : ______________________________

வினை : ______________________________

4) கரை

பெயர் : ______________________________

வினை : ______________________________

5) ஊர்

பெயர் : ______________________________

வினை : ______________________________

6) தை

பெயர் : ______________________________

வினை : ______________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 7 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் வாக்கியத்தில் உள்ள இடை வெளிகளில் பொருத்தமான வேற்றுமை உருபுகளை வைத்து நிறைவு செய்க.**

1) ஒரு மரத்தின் அடியில் இருந்த ____________________ (புற்று) இருந்து பாம்பு ஒன்று வெளியே வந்தது.
2) தந்தையின் ______________________ (சுகவீனம்) கண்ணனின் குடும்பம் வறுமையடைந்தது.
3) (கண்ணன்) _______________________ பாராட்டு விழா நடாத்தப்பட்டது.
4) (கண்ணன்) _______________________ ஆர்வத்தை மேலதிகாரி பாராட்டினார்.
5) (மாமா) _______________________ வாணியும், பாலனும் தேர்த்திருவிழா காணச் சென்றார்கள்.
6) வேடன் குடிசையில் இருந்து வெளியேறி (காடு) ____________________ வேட்டையாடச் சென்றான்.
7) அமைச்சரைச் சந்திக்க வந்த (மக்கள்) ______________________ காவலர்கள் பாதுகாப்புக் கொடுத்தனர்.

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**எழுதப்பட்ட சிறுகதையை தொடர்ந்து உமது கற்பனையில் எழுதி முடிக்கவும். நீர் எழுதும் தொடர்ச்சி 50 சொற்களுக்கு குறையாது இருக்க வேண்டும்.**

ஒவ்வொரு வருடமும் நாங்கள் குடும்பமாக "ஈஸ்டஷோ" வுக்குப் போவோம். இந்த வருடமும் கடந்த சித்திரையில் நடைபெற்ற "ஈஸ்டஷோ" வுக்கு அப்பா, அம்மா, தம்பி, நான் நால்வரும் சென்று மகிழ்ச்சியாக நாள் முழுவதும் பொழுதைக் கழித்தோம். இரவு வந்ததும் இருள் சூழ்ந்தது. வாண விளையாட்டைப் பார்ப்பதற்காக நாம் காத்திருந்த போது திடிரென மழை கொட்டத் தொடங்கியதும் எல்லோரும் கடைக்குள் ஓடினார்கள். நாங்களும் ஓடினோம். சனக்கூட்டத்தில் பின்னால் திரும்பிப் பார்த்தேன் எனது பெற்றோரைக் காணவில்லை.

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

தனது தந்தையாரின் சுகவீனத்தால் கவலையடைந்து படிப்பில் கவனம் செலுத்தாமலும், பாடசாலைக்கு ஒழுங்காக வராமலும் இருக்கும் உங்கள் உற்ற நண்பனுக்கு, கல்வியின் அவசியத்தைக் கூறி அறிவுரைக் கடிதம் ஒன்று எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.**

1. எனது தமிழ்ப் பாடசாலையின் கலைவிழா
2. அன்னையர் தினம்
3. தைப் பொங்கல் விழா
4. தமிழ்க்கலாசாரம்